சிறப்பம்சம், எமது நாட்டில் சிறந்து விளங்கும் தலங்கள் பற்றிய வரலாறாகும். சிறப்பாக திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, திருக்கேதீச்சரம், கீரிமலை, முன்னேச்சரம், வண்ணை வைத்தீசுவரம், காரை திண்ணமாபுரம், போன்றவற்றின் அருளாட்சிகளையும் தெய்வீகப் பெருமைகளையும் ஆசிரியர் புகழ்ந்து பாடியுள்ளார். இதனைத் தொடர்ந்து வட்டூரில் விசுவேசர் கோயில் கொண்ட செய்தியை அசிரியர் எடுத்துக் கூறி அவ்வாலய வழிபாட்டின் பயனை நன்கு விளக்கியுள்ளார். (178, 179) சிறந்த கவிஞரான புலவர்மணி யாழ் நாட்டின் பெருமைகளைக் கூறுமிடத்து அங்கு வாழ்ந்த கவிஞர்களையும் சமய நெறிநின்ற சான்றோர்களையும் நன்றியுணர்வுடன் நினைவு கூர்கின்றார்.

நண்ணுங் கூழங் கைப்புலவன்
நல்லைச் சின்னத் தம்பிமுதல்
எண்ணில் கவிதை பல செய்த
எழிலார் புலவன் சிவசம்பன்
தண்ணென் கவிதை பலதந்த
தங்கத் தாத்தா சுந்தரர்போல்
எண்ணில் புலவவோர் கவித்தீபம்
ஏற்றி வைத்த யாழ்நாடு (203)

என்ற பாடல் யாழ் நாட்டின் கவிஞர் பெருமக்களின் பெருமைகளைக் கூறுகின்றது. சைவத்தையும் தமிழையும் காத்து தம் வாழ்நாளை அர்ப்பணித்த நல்லை நகர் நாவலரை நினைவு கூர்ந்து அவர்தம் அடிக்கமலத்தை வழுத்து வதாத் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

திருவாரும் நல்லைநகர்க்
குணகிரியில் திகழ்ந்தெழுந்தே
ஒரு வாத கலைஞனாகக்
கதிரவனாய் இருளகற்றி
வருவாய்மைச் சிவநெறியைத்
தமிழ்மொழியை வளர்த்தவருட்
குருவாயஆறுமுக நாவலரும்
குலவு நாடு (208)

என ஆசிரியர் எமது யாழ்நாட்டின் சைவப் பாரம்பரியத்தின் சிறப்பினைக் கூறுகின்றார்-சித்தர் பரம்பரை, யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்த காரணம் நாட்டின் இயற்கை வளம், மக்களின் வாழ்வியல்

போன்ற அம்சங்களை உள்ளடக்கி யாழ் நாட்டுச் சருக்கத்தை ஆக்கியுள்ளார். நான்காவது வட்டு மாநகர்ச சருக்கமாகும். இந் நகரின் சிறப்புக்களையும் வரலாற்றுப் பெருமைகளையும் ஆசிரியர் ஆங்காங்கே நயம்படப் பாடியுள்ளார். இங்கு வாழ்ந்த நல்லறிஞர்களையும் விதந்து பாராட்டுகின்றார். இப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலமையாளர்பற்றியும் சைவச்சான்றோர் பற்றியும் நாமறிந்து கொள்ளக் கூடிய வரலாற்று ஆவணமாக இச் சருக்கம் அமைந்துள்ளது.

வட்டுமாநகரில் கோயில் கொண்டெழுந்தருள் சுரக்கும் தெய்வங்கள் பற்றியும் ஆலயங்கள் பற்றியும் ஆசிரியர் விளக்கமாகக் கூறுகின்றார்.

"அடுத்தூரும் இடரகற்றும் ஐங்கரர்க்கும்
ஆதியந்தம் அற்ற சிவ பரனா ருக்கும்

தொடுத்தமைத்த திருத்தளிகள் பலவேயாகும்
தொழுதெழுவார் பழவினையும் துயரும் தீரும்"
(434)

என்ற பாடல் திருக்கோயில் மரபினைப் போற்றுகின்றது.

இந் நூலின் ஐந்தாவது சருக்கம் வீரபத்திர சுவாமியின் அருட் சிறப்புக்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. இரண்டாவதாக அமையும் அருள்புரி காண்டத்தில் முதலாவது உபதேசச் சருக்கம் உயர்ந்த தத்துவார்த்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது. சைவசித்தாந்த உண்மைகளையும் ஆசிரியர் எளிமையான பாடங்களின் வழி நன்கு உணர்த்துகின்றார். இறையருளின் சிறப்பினைப் போற்றுகின்றார்.

அறிவுடைய ஆன்மாவுஞ் சத்தசத்தை அறியுமேனும்
மறிதருமே தாஞ்சார்ந்த பொருளினது வண்ணமாகி
பிறிவரிய சகல சுத்த கேவலமும் பிறங்கிவைகும்
இறையருளும் முன்னெய்தி அறிவிக்க அறியுமாமால்
(672)

என்ற பாடல் அவ்வகையில் சிந்தனைக் குரியதாகவுள்ளது. நமச்சிவாய என்ற பஞ்சாட்சர தத்துவம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத்தின் தத்துவம், மகிமை, ஆகியவை ஆசிரியரினால் நன்கு கூறப்பட்டுள்ளன.

அருள்புரி காண்டத்தின் இரண்டாவதாக விசுவேசர்ச் சருக்கம் அமைகின்றது. இதுவே இந்நூலின் முக்கிய பகுதியாகும். இங்கு கோயில் கொண்ட விசுவேசரின் அருட்சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

"மாயிரும் பௌவம் சூழ்ந்த
மகிதலத் துறையும் மாந்தர்
ஆயிரத் தெட்டே என்னா
அறைதரு சிவாலயத்துள்
பாயிருள் அகற்றப் போந்த
படரொளி ஞாயிறென்றே
வாயினால் வழுத்து கிற்பார்
வளர் விசு வேச்சரத்தை (777)

என விசுவேச்சரப் புகழ் பாடப்பட்டுள்ளது. ஆலய அமைப்பு சிற்பங்களின் கலைச்சிறப்பு, ஆலய வழிபாட்டின் தத்துவ விளக்கம் நித்திய நைமித்திய பூஜைகள் பற்றிய விளக்கம், சிவபூஜா பலனைத் தந்தருளும் சண்டேசுவரர் பெருமை, சிவனது அருட் சிறப்பு, வழிபடும் அடியவர் சிறப்பு, ஆகியவற்றை எடுத்துக்கூறி அனைவரையும், வட்டூர் விசுவேசுவரரை தொழ வரும்படி அழைக்கின்றார். ஆசிரியர்.

கருதிடும் அடியர் உளமதி
லுறைவர் கடிதாக
மருவிடு துடியின் இடைமயில்
பயிலும் விசுவேசர்
பெருகிடு புனலின் இறவொடு
கயலும் பிறழ் வட்டூர்
வருதரு முதல்வர் கழலடி
தொழவே வருவீரே (909)

என்று அனைவரையும் சிவவழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்தும் நூலாக இது அமைவது பாராட்டிற்குரியது. அருள்புரி காண்டத்தின் மூன்றாவதாக சுப்பிரமணிய சுவாமி சருக்கமும், நான்காவதாக கூத்தப்பிரான் சருக்கமும் ஐந்தாவதாக விழாவயர் சருக்கமும் இந்நூலுக்கு சிறப்பினைத் தருகின்றன. இவ்வாலயத்தில் ஆன்மாக்கள் நன்மை பெற நடைபெறும் விழாவின் சிறப்பினை ஆசிரியர் நயம்பட உரைக்கின்றார்.

பண்டைநாள் விசுவே சர்க்குப்
பரவுசித் திரை மூலத்தில்
கொண்ட சீர்க் கொடியுயர்த்திக்
குலவுநல் விழாவெடுத்தார்
மண்டிடும் அன்பாற் பின்னர்
வந்த ஆனிப்பரணிநாள்
கண்டுமே தொடக்கி மேய
தீர்த்தமுத் தரத்தே செய்தார். (1204)

என்றபாடல் இவ்வாலயத்தில் நடைபெறும் மகோற்சவப் பெருமையைக் கூறுகின்றது.

இவ்வகையில் விசுவேசர் புராணத்தை புலவர்மணி மயில்வாகனனார் ஒரு சிறப்புமிக்க சைவக் களஞ்சியமாக ஆக்கியுள்ளார். சிவவழிபாட்டின் மேன்மையையும் அவ்வழிபாட்டில் இணைவோர் பெறும் பயனையும் தெளிவுபடக் கூறியுள்ளார். இப்புராணத்தில் பல்வேறு பாவடிவங்கள் கையாளப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். கலிவிருத்தம், தரவுக் கொச்சகம், அறுசீர்விருத்தம், வேறு விருத்தம், எண் சீர் விருத்தம், கலிநிலைத் துறை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, போன்ற வற்றைக் கையாண்டு ஆசிரியர் தமது கவித்துவப் புலமையைக் காட்டியுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். அனைவரையும் சிவவழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்தும் விசுவேசர் புராணத்தைச் சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

புலவர்மணி மயில்வாகனனாரின் இவ்வரிய படைப்பினால் சைவசமயத்தின் பெருமையை அனைவரும் உணர்ந்து நயக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. ஆசிரியருக்கு விசுவேசப் பெருமானதுதிருவருளினால் நல்ல தேகசுகமும் நீண்ட ஆயுளும் கிடைப்பதாகுக. மேலும் இது போன்ற பயனுள்ள முயற்சிகள் தொடர அவனருள் என்றறென்றும் துணைநிற்பதாகுக என்று வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

# அணிந்துரை

**பேராசிரியர். திரு.அ. சண்முகதாஸ் அவர்கள்**
முதுநிலைப் பேராசிரியர் பீடாதிபதி
உயர்பட்ட ஆய்வுப் பீடம் யாழ் பல்கலைக்கழகம்.

பண்டிதர் மயில்வாகனம் அவர்கள் இயற்றிய, வீரபத்திர சிவபுராணம் என வழங்கும் அருள்மிகு விசுவேசர் புராணம் வெளிவருகின்றது. பாயிரச் சருக்கத்துடன் ஐந்து சருக்கங்கள் கொண்ட ஆதிகாண்டமும், ஐந்து சருக்கங்கள் கொண்ட அருள்புரி காண்டமும் இப்புராண இலக்கியத்திலே இடம்பெற்றுள்ளன. ஆயிரத்து முன்னூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களைக் கொண்ட இப் புராணம் ஒரு பெரிய காவியமாகவே அமைகின்றது.

பாயிரச் சருக்கத்திலே, 44 பாடல்களில் பல்வகைத் தேவர்களும் தேவரடியவர்களும் பாடப்படுகின்றனர். வட்டுக்கோட்டையிலே எழுந்தருளியிருக்கும் விசாலாட்சி சமேத விசுவேச சுவாமியினுடைய புராணமாக இது அமைகின்றது. ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பெயர்பெற்ற உமையம்மை, வட்டுக்கோட்டையிலே விசாலாட்சி என்று பெயர் பெறுவதாக ஆசிரியர் பாடுகின்றார்.

"சீர்பரவும் மதுரைதனில் மீனாட்சி
அம்மையெனத் திருப்பேர் பூண்டும்
ஏர்பரவுங் காஞ்சிதனில் காமாட்சித்
தாயாகி இயைந் திருந்தும்
பேர்பரவும் புலியூரில் ஐந்தொழில்செய்
சிவகாமிப் பெரும்பேர் உற்றும்
நீர்பரவும் வட்டூரில் நின்றருளும்
விசாலாட்சி திருத்தாள் போற்றி" (செய் 11)

என்று அப்பாடல் அமைகின்றது. "அணிமுகங்கள் ஓராறும் அருட்கரங்கள் ஈராறும்" என்று தொடங்கியமையும் பாடல் முருகனை அழகாகப் பாடுகின்றது. செய்(25)

கடவுள் வாழ்த்து முடிந்த பின்னர் விசுவேசர் புராணச் சருக்கங்களை ஒவ்வொன்றாக, சுருக்கமாக 26 பாடல்களிலே ஆசிரியர் கூறுகின்றார். கூத்தப் பிரான் சருக்கம் பற்றிக் கூறும்போது,

"சூடுங் கொன்றைச் சடைதாழத் தொந் தொம் என்றேமுழவதிர
நீடுந் தில்லை மன்றினிலும் நேயர் நெஞ்ச வரங்கினிலும்
ஆடும் ஐயன் அன்னையுடன் வட்டூர் போந்த அடைவதனை
கூடும் கூத்தப் பிரான் சருக்க மென்னக் குறித்தே பேசினமால்"
(செய் 61)

என்று கூறுவதைக் காணலாம்.

காவிய ஆசிரியர் பண்டிதர் மயில்வாகனம் அவர்கள் செந்தமிழ் இலக்கியங்களிலும் நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளிலும் நல்ல பட்டறிவும் படிப்பறிவும் உடையவராகத் திகழ்வதனால்,காவியக் கட்டமைப்பும் பாடல்களும் செம்மை வாய்ந்தனவாகத் திகழ்கின்றன. பாடல்கள் நல்ல சந்தங்களுடன் விரும்பிப் படிக்கக்கூடியனவாக அமைகின்றன.

"நஞ்சணி கண்டா போற்றி நாயகி பாகா போற்றி
விஞ்சுசீர் வன்னி மத்தம் வேய்ந்திடு முதல்வா போற்றி
வெஞ்சின உழுவை யானை வெவ்வுரி கொண்டாய் போற்றி
மஞ்சுறை கைலை மன்னும் மாமணி போற்றி போற்றி" (செய் 98)

என்றொரு சந்தத்திலே தேவர்கள் முனிவர்களளெல்லோரும் சிவனை வேண்டுதல் செய்கின்ற சந்தர்ப்பத்தினைக் கூறும் ஆசிரியர் அதே இடத்தினில்,

"மானேர் நோக்கி மணவாளா
மன்னும் உயிருள் உயிரானோய்
தேனார் கொன்றைத் திருச்சடையாய்
திகைக்க எழுந்த நஞ்சருந்தி
வானோர் தம்மைக் காத்தனை நீ
வடத்தின் நிழல் அன்றமர்ந்து
ஞானம் உரைத்தாய் நால்வர்க்கே
நளின மலர்த்தாள் சரணெந்தாய்" (செய் 99)

என்று வேறொரு சந்தத்தினிலே பாடலை அமைக்கின்றார்.

யாழ்நாட்டுச் சருக்கத்திலே மிகுந்த ஈடுபாட்டுடனும் உணர்வுடனும் யாழ்நாட்டு நிலைகளை அருமையான கவிதைகளிலே வடித்தளிக்கின்றார். காவியச் செல்வாக்குடனும் கற்பனையுடனும் பாடுவதால் உயர்வு நவிற்சி பல இடங்களிலே இடம்பெறுகின்றது. வட்டு மாநகர்ச் சருக்கத்திலே மிகவும் சிறப்பான ஒரு விடயத்தினை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாண மாவட்டத்தில் கூத்துக்கு

பெயர்போன இடம் வட்டுக்போட்டை. இதனை அசிரியர் புராணத்திலே விளக்கமாகப் பாடுகின்றார்.

“தருமபுத் திரனார் கூத்தும்
தகைமலி விராடன் கூத்தும்
மருவுநல் ராமன் கூத்தும்
மாண்குருக் கேத்திர னாதி
பெருகுசீர் விளைத்த நட்டம்
பற்பல பின்னு மாடி
வருமியற் பெயரும் ஏக
வழங்குபாத் திரப்பேர் கொண்டார்” (செய் 42)

ஆசிரியர், அருள்புரி காண்டத்து உபதேசச் சருக்கத்தில் வேதாந்த சித்தாந்த நெறிகளை இலகு நடையில் விளக்குகிறாா. விழாவயீர் சருக்கத்தில் நாட்டார் கலைகளுக்கு முதலிடம் வழங்குகின்றார். “ஏந்திக்கரகமதாடுவர் சென்னி இனிதேதான் தாந்தித் திமியென மற்கடம் (அனுமன்கூத்து) ஆடுவர் தீந்தித் திமியெனக் காவடி கொள்ளுவர் ஒருசில்லோர், போந்தே கிருத்திமம் புடையெங்கும் ஆடுவர்” என்கிறார்.

அம்மட்டோ தேர் விழாவில் தாய்தந்தையாருடன் கூடவந்த சிறுவர் சிறுமியரின் அலங்காரக் காட்சிகளை, “அண்டி அது இது நல்குதிர்” என்று சிறுவர் அலைகின்றனராம், சிறுமியர் “மண்டும் வளையொடு மாலைகள் கொள்வர்”களாம் பைந்தொடியார் பண்டம் உள சில கொள்ளுவாராம் விரிக்கிற்பெருகும் (செய் 1282-1283)

நீண்ட காலத்தின் பின்னே ஈழநாட்டிலே இப் புராணம் இயற்றப்பட்டு வெளிவருகின்றது. தமிழ்க் காவிய மரபும் புராண மரபும் இணைந்து விசுசேர் புராணம் அமைந்துள்ளது.புராண ஆசிரியர் தமிழ் இலக்கிய இலக்கண வல்லுநர் என்பதனாலே செய்யுட்கள் செம்மையுடனும். அழகுடனும், கற்பனைத் திறனுடனும் அமைகின்றன. ‘சென்ற காலப் பழுதிலாத் திறனையும்’ இக்கால நிலைப்பாடுகளையும் ஒருங்கமைத்துப் புராணத்தினை ஆசிரியர் இயற்றியுள்ளார். தமிழன்னைக்கு இன்னுமொரு அணிகலனை விசுவேசர் புராண மாக அளிக்கும் பண்டிதர் மயில்வாகனம் அவர்கள் தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர்.

செய்யுள் நூல், உரைநடை நூல் பலவற்றின் ஆசிரியரும், ஒரு சாலை மாணவரும், உழுவலன்பரும் ஆகிய பண்ணாகம் அருட்புலவர், புலவர்மணி

பண்டிதர் திரு.அ.ஆறுமுகனார் வழங்கிய

# சிறப்புப்பாயிரம்

செந்திருவும் கலைமகளும் சேர்ந்து வைகுஞ்
சீர்த்திமலி வட்டுமாநன் நகரந் தன்னில்
முந்துறுகொள் ளோலையெனும் பதியின் கண்ணே
முன்னாளில் மூத்தப்பா முதலி என்பார்,
வந்துநல்லூர்ப் பதிநின்றுங் கொண்டு வந்த
மாவீர பத்திரனார் படிமந் தன்னைச்
சந்தமுறு தளிநிறுவித் தாபித் தாங்கண்
தகுசிறப்பும் நித்தியமும் கண்டார் வாழி -1-

இற்றைக்கு நூற்றைம்பான் ஆண்டின் முன்னே
இம்முதலி மரபினிலே அவத ரித்த
பொற்புடைய சிவஅப்பா முதலிச் சித்தர்
போற்றுவிசா லாட்சிவிசு வேசர் கூட
மற்றுமுள பரிவார மூர்த்தம் யாவும்
வகுத்தெடுத்துக் கருவறையே தீர்த்தக் கூபம்
அற்புதமாய் அமைவித்து நிறைவு செய்தே
அரியதிருப் பணிகளெலாம் முற்று வித்தார். -2-

ஆகமநூல் விதியெடுத்த ஆலயத்தை
அடைவோடும் அழகுசெய்தே குடமு ழுக்கும்
ஓகையுடன் மண்டலாபி டேகம் மற்றும்
உயர்ந்தமகோற் சவநிறைவில் தேர்வி ழாவும்
தோகைவிசா லாட்சிபயில் பரற்குத் தீர்த்தம்
தூயகுரு மார்க்கெல்லாம் பாராட் டும்பின்
தாகமொடு பசிதீர யாவ ருக்குந்
தகுமன்ன தானமுந்தான் செய்வித் தாரே -3-

நூற்றாறாண் டிவ்வுலகில் வாழ்ந்து வாய்மை
நோன்புதவம் பூண்டசிவ முதலி அப்பா
ஏற்றமுற அமைத்ததல நிருவா கந்தான்
என்றும்நன் றாகநடை பெறநி வந்தம்
ஆற்றவுமே தேடிவைத்தார் அதனால் இன்றும்
அத்தலநிர் வாகமிக நல்ல வண்ணம்
மேற்கொண்டும் நடக்கின்ற துயர்ந்தோர் செய்கை
மேன்மேலும் வளர்ந்துவரும் இதுவே நீதி -4-

ஆதிபரன் விசுவேசர் தலத்தின் தோற்றம்
அறிந்தினிய வரலாறாய் விளங்கும் வண்ணம்
மேதக்க விசுவேசர் புராணம் என்ன
விளங்குமுயர் காப்பியமாய்ச் சுவைகள் விஞ்ச
ஆதிகாண்டம் பின்அருள்செய் காண்டம் கண்டு
அவற்றினுட் பிரிவுகளாய்ச் சருக்கம் ஆக
ஓதிநல்ல சந்தமலி விருத்தப் பாவால்
உவந்தளித்தார் புலவர்மணி உயர்ந்தோர் போற்ற -5-

உ

## பொருளடக்கம்


வெளியீட்டுரை

அருளாசி

வாழ்த்துரை

நல்லாசி

நயப்புரை

ஆய்வுரை

நயப்புரை

அணிந்துரை

சிறப்புப் பாயிரம்

ஆதிகாண்டம்

| | | பக்கம் | செய்யுள் |
|---|---|---|---|
| 1. | பாயிரச் சருக்கம் | 1-16. | 70 |
| 2. | கைலைமலைச் சருக்கம் | 17-42. | 112 |
| 3. | யாழ்நாட்டுச் சருக்கம் | 43-77. | 156 |
| 4. | வட்டு மாநகர்ச் சருக்கம் | 78-111. | 143 |
| 5. | வீரபத்திர சுவாமி சருக்க | 112-136. | 106 |
| | அருள்புரி காண்டம் | | |
| 6. | உபதேசச் சருக்கம் | 137-176. | 171 |
| 7. | விசுவேசச் சுருக்கம் | 177-214. | 159 |
| 8. | சுப்பிரமணிய சுவாமி சருக்கம் | 215-244. | 122 |
| 9. | கூத்தப்பிரான் சருக்கம் | 245-283 | 159 |
| 10. | விழாவயர் சருக்கம் | 284-314 | 122 |
| 11. | பாட்டு முதற்குறிப்பகராதி | 315-317 | |
| 12. | விசுவேசர் புராண அருஞ்சொற் பொருள் விளக்கம் | | |
| 13. | பிழைதிருத்தம் | | |
| 14. | புலவர் ஆக்கங்கள் சில | | |



அருள்மிகு விசாலாட்சி சமேத விசுவநாத சுவாமிகள்

உ
சிவமயம்
விசாலாட்சி சமேத காசி விசுவநாத சுவாமி
திருவடிகளே துணை

வட்டுக்கோட்டை

வீரபத்திர சிவ புராணம்

என வழங்கும்

# அருள்மிகு விசுவேசர் புராணம்

## 1. பாயிரச் சருக்கம்

### விநாயகர் காப்பு

(கலிவிருத்தம்)

பொன்னை மானும் புரிசடை வானவன்
மின்னை நேரனை பாகன் விடையவன்
என்னை சீர்விசு வேசன் கதைசொல
முன்னை யானை முகன்பதம் போற்றுவாம். 1

### விசுவேசர் துதி

கங்கைசேர் சடையன் வட்டூர்க்
கண்ணுதல் விசுவே சன்றன்
பொங்கெழில் வதனம் போற்றி
பொருந்துமைக் களமும் போற்றி
அங்குயர் வரதஞ் செய்ய
அபயமெய்க் கரமும் போற்றி
மங்கைசேர் பாகத் தன்னான்
மலரடி போற்றி போற்றி 2

விசாலாட்சி அம்மை துதி

பொருட்கடலாம் வேதமெலாந் தனிமுயன்றும்
கரைகாணாய் புகழ் படைத்தாள்
இருட்கடலாம் மேனியற்கன் றாழியருள்
விசுவேசர் இடப்பால் கொண்டாள்
மருட்கடலில் உயிர்க்குலங்கள் காலமெலாம்
மாழாமே காப்பாள் வட்டூர்
அருட்கடலாம் விசாலாட்சி அன்னையவள்
அரவிந்த சரணம் போற்றி 3

வீரபத்திரசுவாமி துதி

ஆத்தியணி வேணியர்தம் அருளாணை
வழிவந்த அமல போற்றி
தீத்தொழில்செய் சிறுவிதிதன் வேள்வியொடு
தீமையுள சிதைத்தாய் போற்றி
ஏத்திநிற்கும் அடியவர்தம் இடர்க்குலமும்
வினைமாசும் இல்லை யாக்கிக்
காத்தருளும் வீரபத்திர வட்டூராய்
கடிமலர்த்தாள் போற்றி போற்றி 4

நூற்பயன்
(கலிவிருத்தம்)

மன்னு சீர்விசு வேசர்தம் மாக்கதை
முன்னும் அன்பின் மொழிந்தவர் கேட்டவர்
இன்னல் நீங்கி நெடிதிங் கிருந்துபின்
துன்னி வானஞ் சிவகதி துய்ப்பரே 5

வாழ்த்து
(அறுசீர் விருத்தம்)

மாமழை சிறந்து வாழி மன்னுமான் குலமும் வாழி
ஏமமார் அறிவர் வாழி இசைமிகு தமிழும் வாழி
நேமமார் மறையும் வாழி நிலவுசீர்ச் சைவம் வாழி
தாமமார் தலைவர் வாழி தரணியும் வாழி வாழி 6

## 2 கடவுள் வாழ்த்து

### சிவபிரான் துதி

வான்முதற் பூத மைந்தாய் மதிசுடர் உயிரும் ஆகி
மான்முதற் றேவர் கெட்டா மாண்புறு பரம தாகி
மீன்பிறழ் கண்ணி யோடும் மேயபல் உலகுங் காக்குந்
தேன்பிறழ் கொன்றை வேணிச் சிவன்கழல் சென்னி சேர்ப்பாம் 7

உன்னரும் பவங்க டோறும் உயிர்களோ டிணைந்து நின்று
பன்னரும் பெருமை நுண்மை படைத்துயர் பரனாய் வைகி
அன்னைதன் கூறாய் மன்னி அருவுருக்கொண்ட பெம்மான்
சின்மயன் நண்ணின் நல்லோன் சிவன்கழல் சென்னிசேர்ப்பாம் 8

பரவுறும் அடியர்க் கென்றும் பழவினை மாற்றும் வள்ளல்
கரவுறு சிந்தை கொண்டார் கருதொணா அந்தி வண்ணன்
குரவணி வேணிப் பெம்மான் கோதையுந் தானு மானோன்
சிரமணி மாலை பூண்ட சிவன்கழல் சென்னி சேர்ப்பாம் 9

### உமையம்மை துதி

[தரவுக் கொச்சகம்]

ஆறுதருஞ் சடைமுடியெம் அரனிடத்தில் அமர்ந்தருளிக்
கூறுதருந் தழலுமதன் குடுமெனக் குலவுந்தாய்
வீறுதருந் தடங்கண்ணால் வினையகற்றி அனைத்துயிர்க்கும்
பேறுதரும் பிராட்டியுமை பிணைமலர்ந்தாள் வழுத்துகிற்பாம் 10

[வேறு விருத்தம்]

சீர்பரவும் மதுரைதனில் மீனாட்சி
அம்மையெனத் திருப்பேர் பூண்டும்
ஏர்பரவுங் காஞ்சிதனில் காமாட்சித்
தாயாகி இயைந்தி ருந்தும்
பேர்பரவும் புலியூரில் ஐந்தொழில்செய்
சிவகாமிப் பெரும்பேர் உற்றும்
நீர்பரவும் வட்டூரில் நின்றருளும்
விசாலாட்சி திருத்தாள்போற்றி 11

கூத்தப்பிரான் துதி
வேறுவிருத்தம்

12 பின்னுஞ் சடையில் மதியிலங்கப்
பிறங்கும் விழியில் அருண்மலர
மன்னுங் கரத்தில் உடுக்கொலிக்க
வளரும் அங்கி ஒளிகூட்டத்
துன்னுந் திருவாய் நகையரும்பத்
துணையாம் அஞ்சீர் எனக்காட்டிப்
பொன்னம் பலத்து நடமியற்றும்
புனிதன் செய்ய பதம் போற்றி.

சிவகாமி அன்னை துதி

13 சித்த வெளியுஞ் செம்பொன்செய்
தில்லை மற்றும் பயில்தருவான்
அத்தன் அமலன் ஆனந்தன் ஐந்து
தொழில்செய் தாடுங்கால்
நித்தம் பாணி சீர்துக்கு நிகழ்த்தி
மகிழ்ந்தே கருணைபொழி
தத்தை மொழியாள் சிவகாமித்
தாயின் மலர்த்தாள் தலைக்கணிவாம்

தட்சணாமூர்த்தி துதி
(தரவுக் கொச்சகம்)

14 எல்லையில்சீர் மறையாதி இயம்பவொண்ணாப் பொருண்முடிபைச்
சொல்லாலே சொலவுமொண்ணா மோனமதை வடநிழற்கீழ்
நல்லார்கள் நால்வர்க்கும் நனிநவிலும் மேருகிரி
வில்லானைத் தட்சணா மூர்த்திதனை வேண்டிடுவாம்

பஞ்சலிங்க துதி
(வேறு அறுசீர் விருத்தம்)

15 திருவளரும் தில்லைதனில் வெளியாகிக்
காளத்தி வளியு மாகி
உருவளரும் அருணையிலே உயர்தீயாய்
ஆனைக்கா நீரு மாகி

மருவளரும் காஞ்சிதனில் காமாட்சி
மகிழ்தணைக்கும் புவியு மாகிக்
கருவளரும் அண்டங்கள் காத்தியக்கும்
தெய்வதத்தைக் கருதல் செய்வாம்

இலிங்கோற்பவர் துதி
( தரவுக் கொச்சகம் )

16 மாதவனும் மலரயனும் மமதைமிகு மனத்தினராய்
ஓதரிய உகம்பலவாய் ஒழிவின்றி அமராற்றத்
தீதகற்றி அருள்புரியத் திருவுள்ளங் கொடுபாந்த
சோதியிலிங்கோற்பவரைத் தொழுதேத்தி வழுத்திடுவாம்

விநாயகர் துதி

17 பிரணவத்தின் பொருளானைப் பிறங்குமொளிவடிவானை
மரணபயந் தவிர்ப்பானை வல்லபைசேர் வாரணத்தை
அரணமென அடையுநருக் கணியானை அகநிறுவிச்
சரணமெனுங் கமலமலர் தலைக்கணியாய்க் கொடுவாழ்வாம்

நடன கணபதி துதி
(வேறு அறுசீர் விருத்தம்)

18 பங்கயத் தயனும் மாலும்
பராவியே பாங்கர் நிற்ப
ஐங்கர நால்வாய் முக்கண்
அங்குச பாசங் கூடப்
பங்கமில் தொந்தி யாடப்
பாதகிண் கிணிகள் கொஞ்சத்
துங்கமார் நட்டமி யற்றுங்
கணபதி துணைத்தாள் போற்றி

வலஞ்சுழி விநாயகர் துதி
[ தரவுக் கொச்சகம் ]

19 வீங்கிவரு கங்கைபுனை வித்தகனும் மாதுமையும்
ஈங்கருளும் இறையோனை இடரனைத்துங் களைவானைத்
தாங்குவலம் சுழித்தடக்கை தரித்தருளும் வாரணத்தை
நீங்காத பேரன்பின் நினைந்துருகி வழுத்திடுவாம்

## வைரவர் துதி

செஞ்சடையும் விழிமூன்றுஞ் சினவரவுஞ் செறித்திலங்க
அஞ்சுதரு திரிசூலப் அணியுடுக்கை கபாலபாசம்
விஞ்சிடவே சிலம்பலம்ப வேதமூரும் வைரவனார்
கஞ்சமலர்ச் சரணங்கள் கருதிநிதம் பணிந்திடுவாம் 20

## வீரபத்திரர் துதி

[வேறு அறுசீர் விருத்தம்]

ஆயிரம் மௌலி சூடும் ஆரணப் பொருளே போற்றி
பாயிருங் கனலாம் பூதப் படையுடைப் பரனே போற்றி
வேயன தோளி பத்ரை விரும்புமெய்ப் பொருளே போற்றி
நேயமார் வீர பத்ர நிமலவுக் கிரனே போற்றி 21

அறிதரற் கரியோ னாகி அன்னையுந் தானு மீண்டி
நெறிதனை உணராத் தக்கன் நிகழ்த்துமா மகத்தைச் சாடி
மறியதன் தலையுந் தந்து வருசுரர் தீதுந் தீர்த்துச்
செறிதரு வீர பத்ரர் திருவடி சென்னி சேர்ப்பாம் 22

## சோமாஸ்கந்தர் துதி

விடையவன் ஒருபா லாக
விமலையார் மறுபான் மன்ன
இடைமிசைக் கந்த வேளும்
இருந்தருள் நீர்மை மேவிக்
குடையென நாகங் கொண்ட
அச்சுதன் நெஞ்சிற் பேணும்
நடையுடைச் சோமாஸ் கந்த
நற்றிருக் கோலம் போற்றி 23

## சுப்பிரமணியர் துதி

ஆறுசீர்ப் படைவீ டாதி அருள்மலி பதிகள் மேயான்
பேறுசேர் தாயர் சேரப் பிறங்குநன் மஞ்ஞை ஊர்வோன்
மாறிலா அடிமை கொண்டு மலர்ப்பதஞ் சென்னி வைத்தோன்
ஈறிலாக்குமர வேளை இதயத்துள் இருத்தி வாழ்வாம் 24

### ஆறுமுகசுவாமி துதி

( வேறு அறுசீர் விருத்தம்)

அணிமுகங்கள் ஓராறும் அருட்கரங்கள்
ஈராறும் அமைந்தி லங்கப்
பணிமொழியார் அரமின்னும் குறமின்னும்
இருபுடையும் பாங்காய் மேவ
பிணிமுகமீ திவர்ந்தருளி அருணிலவைப்
பாருலகுக் களிக்கும் பெம்மான்
மணிமலர்த்தாள் சிரத்திருத்தி மருவுமிருட்
பகைவென்று மகிழ்ந்து வாழ்வாம் 25

குடிலையின் பொருள தானோன்
குடிலையில் உலவும் பெம்மான்
குடிலையின் பொருளைத் தேராக்
குரவனைச் சிறைசெய் திட்டோன்
குடிலையின் பொருளைச் சாமி
கொள்ளுமா புகன்ற போதன்
குடிலைவாழ் குறமின் கேள்வன்
குரைகழல் சென்னி வைப்பாம் 26

### தண்டபாணி துதி

[ வேறு அறுசீர் விருத்தம் ]

இன்சுவைக் கனி பெறற்காய்
எழிலுறு மஞ்ஞை ஊர்ந்தோன்
கன்மனங் கரைக்குஞ் ஞானக்
காட்சியன் கருணை வள்ளல்
அன்னையு மணைத்துநீயென்
அன்புசால் பழமே யென்ன
முன்னமர் தண்டபாணி முண்டகத்
திருத்தாள் போற்றி. 27

### ஐயனார் துதி

[கலி விருத்தம்]

சீரணி கோழியங் கொடிகொள் செல்வனை
பூரணை புட்கலை பொருந்து மார்பனை
வாரண மேல்வரு மாலரன் சேய்தனை
ஆரணப் பொருளினை அன்பொடு மேத்துவாம் 28

துர்க்காதேவி துதி

[அறு சீர்விருத்தம்]

உற்றவுயிர்க் குலமனைத்தும் உறுதுன்பம்
எய்திடுநாள் உவந்து காப்பாள்
மற்றதனால்துர்க்கையென மருவுதிருப்
பெயர்தானும் வகித்து நின்றாள்
வற்றாத அருளுடையாள் உடனிருந்தே
வருமச்சம் அகற்றி வைப்பாள்
செற்றமுறு மகிடனையும் முன்தடிந்தாள்
தாயவளைச் சிந்தை செய்வாம் 29

திருமால் துதி

[தரவுக் கொச்சகம்]

வண்ணமுறு பயோததியிற் கண்வளரும் மணிமுகிலைப்
பண்ணமையுஞ் சங்கமொடு சக்கரமும் பரித்தவனை
மண்மகளும் மலர்மகளும் மகிழ்ந்துவக்கும் மாதவனை
எண்ணிநின்று திருவடிகள் சிரமீதில் இருத்திடுவாம் 30

இலக்குமி துதி

[அறுசீர் விருத்தம்]

பாற்கடலில் வந்தவளைப் பதுமமலர்க்
கோயில்வளர் பாவை தன்னைத்
தோற்றுமனைத் துலகுயிர்க்குஞ் சுடர்விளக்கை
அரமாதர் தொண்டு செய்ய
ஏற்றெனது புன்னெஞ்சும் இருந்தாளை
நாரணனார் தேவி யாரைப்
போற்றவருள் இலக்குமியை அகத்திருத்திப்
புன்மையிருள் போக்கி வாழ்வாம் 31

சந்தான கோபாலன் துதி

[தரவுக் கொச்சகம்]

குன்றாலே குடைபிடித்துக் கோவினங்கள் காத்திடுவான்
கன்றாலே விளவெறிந்து கனியுகுத்த மாமாயன்
சென்றேறி உறியளையுண் சந்தான கோபாலன்
தன்றாள்கள் பணிந்துநிதம் தலைக்கணிந்து வாழ்த்துவமே 32

## பிரமதேவர் துதி
[கலி விருத்தம்]

33 நார ணன்றன துந்தியில் நண்ணினோன்
ஆர ணந்தனை ஆய்ந்தநல் லந்தணன்
சீரி லங்கிய தெய்வத வாணிசேர்
பூர ணன்பிர மன்பதம் போற்றுவாம்

## நாமகள் துதி
[எண் சீர் விருத்தம்]

34 ஓங்குகலை உருவாய்வெண் கமலத் துற்றாள்
ஒளிர்கரத்தில் செபமாலை சுவடி கொண்டாள்
வீங்குமெழில் மாணிக்க வீணை தாங்கி
விரவியசீர் ஓங்காரத் தொனியுஞ் சேர்ப்பாள்
பாங்குமிகு பானிலவின் படாம ணிந்தாள்
பயில்புலவோர் செந்நாவில் நடமி யற்றி
ஏங்குமென்றன் புன்னாவும் இருந்தாள் வாணி
இருளகற்றும் பதுமபதம் இறைஞ்சி வாழ்வாம்

## திருநந்திதேவர் துதி

35 எண்ணிலவாங் காலங்கள் படிமை பேணி
ஈட்டியநற் சிவதருமப் போற்றி னாலே
கண்ணுதலார் அமர்ந்தருளுங் கயிலைக் கோயிற்
காவலது பூண்டுறையுங் கருணை வள்ளல்
பண்ணமைய முழவிசைக்கும் பரம ஞானி
பவமகற்றுஞ் சித்தாந்த நெறிப கர்ந்தோன்
அண்ண லெங்கள் திருநந்தி தேவர் பாதம்
அனுதினமுந் தொழுதேத்தி மகிழ்ந்து வாழ்வாம்

## நவகோள் துதி
[தரவுக் கொச்சகம்]

36 ஞாயிறொடு மதிசெவ்வாய் நண்ணுபுதன் குருவெள்ளி
ஏயசனி யிருபாம்பாய் இலங்குநவ கோள்போற்றி
ஆயதுயர்ப் பிணியல்லல் அகன்றவனி உயிர்வாழ
மேபவநன் புரிதிரென வேண்டிநிதம் பரவுகிற்பாம்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி

37 திருப்புகலி மறையவனைச் சிவஞானத் தமிர்தருந்தி
உருத்துவரும் அமணரிருள் ஒருங்ககற்றும் இளங்கதிரைக்
கருத்தகலாத் திருஞ்ஞான சம்பந்தக் கலைமணியை
இருத்தியகத் தென்றென்றும் இடர்களைந்து வழுத்திநிற் பாம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் துதி

38 திருவாமூர்த் தேசிகனைச் சிவனருளால் சிலைதோணி
உருவாக நீர்க்கடலும் உற்பவமும் கழித்தவனை
வருநாவுக் கரையரெனும் வளர்ஞானத் தவநிதியைப்
பெருகார்வத் துடன்பணிந்து பிணிதீர வழுத்திடுவாம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

39 திருநாவ லூரானைத் திருமணத்தில் தடுத்தாண்ட
பெருமானைப் பரவைபாற் பிணக்ககற்ற விடுத்தானைக்
கருமாலைக் கட்டகற்றுங் கற்பகனைச் சுந்தரனை
உருகாநின் றுளத்திருத்தி உவகையுடன் வழுத்திடுவாம்

## மாணிக்கவாசக சுவாமிகள் துதி

40 திருவாத வூரிறையைத் தித்திக்குந் தீந்தமிழின்
உருவாய வாசகமும் கோவையுஞ்சொல் உயர்குருவை
மருவாய நெறிபுகலும் மாணிக்க வாசகனை
ஒருபோதும் மறவாமல் உளத்திருத்தி வழுத்திடுவாம்

## சந்தான குரவர் துதி

[ அறுசீர் விருத்தம் ]

41 வேதாந்தத் தெளிவாய சித்தாந்தத்
திருநெறியை நாளும் நாளும்
போதாந்த ஒளிபரப்பி விளக்கிநின்று
புன்மையிருள் போக்கி வைத்த
தாதாக்கள் மெய்கண்டார் அருணந்தி
சம்பந்தர் உமாப திக்கும்
பாதார விந்தங்கள் சிரத்திருத்திப்
பணிந்துநிதம் பவத்தை வெல்வாம்

சண்டேசுர நாயனார் துதி

( தரவுக் கொச்சகம் )

42
அண்டர்கோன் அருட்குறியை அமைத்தாவின் பாலாட்டி
மண்டுமன்பின் வழிபடவே மகிழ்ந்தீசன் கண்ணியொடுந்
தொண்டருக்கு நாயகமாம் தகைமையுந்தான் தரமகிழுஞ்
சண்டேசர் தாட்கமலந் தலைக்கணிந்து தொழுதுவாழ்வாம்

திருத்தொண்டர் துதி

43
அரனடிகள் வழுத்துதலே அறமென்னும் கொள்கையினார்
கரவறியா வுளமுடையார் கண்டிகைநன் னீறணிவார்
விரவுபொருள் அனைத்தினுமே விமலனையே காணுகிற்பார்
பரவுபுகழ்த் திருத்தொண்டர் பதஞ்சிரத்தே கொடுவாழ்வாம்

அப்பா முதலி துதி

[ எண்சீர் விருத்தம் ]

44 வேண்டுசித்த மருத்துவநூல் அளக்க ருண்டு
மேவினர்தம் அருநோய்கள் தீர்த்த மேலோன்
ஆண்டொரு நூற்றாறிவ் வவனி வைகி
அரியதவ ஒழுக்கங்காத் துயர்ந்த தோன்றல்
நீண்டசிவ தளிநிறுவி நிபந்தம் எல்லாம்
நிமலவிசு வேசருக்கி யற்று நேயன்
காண்டகுசீர்ச் சிவவப்பா முதலி என்னும்
காவலரை உளத்திருத்திக் கருதல் செய்வாம்

வித்தியாகுரு துதி

[ கலி விருத்தம் ]

— பொது —

45 நல்ல செந்தமிழ் நாளும் பயின்றுமே
சொல்பொ ருட்சுவை தோய்ந்திட வூக்கியே
அல்லல் தீர அணைத்தருள் தேசிகர்
பல்ல வரவர் பாதம் இறைஞ்சுவேன்

- சிறப்பு -

( அறுசீர் விருத்தம் )

46

செந்தமிழ் முருகன் செவ்வேள் திருவருள் சிறத்த லானே
எந்தமை முன்னி ருத்தி இணையில் தொல்காப் பியாதி
முந்துதொன் னூல்கள் முற்றும் மொழிந்தருள் வள்ளல் ஞானத்
தந்தைசுப் பையபிள்ளை தாண்மலர் தொழுது வாழ்வாம்

3 அவையடக்கம்

[ கலி விருத்தம் ]

47 பெண்ணொர் பாகர் பிறங்குசெம் மேனியர்
அண்ண லார்விசு வேசர் அருட்கதை
வண்ண வான்கவி செய்யுந் தகவிலேன்
நண்ணு மாசை துரப்ப நவிலுகேன்

48 நீல மாக்கடல் நீடு மணன் மிசைப்
பாலர் வண்டல் அயர்தரு பான்மையின்
கோல மார்விசு வேசர் கதைதனை
ஞால மென்னை வியப்ப நடத்துகேன்.

49 வெல்லும் வெம்பரி ஊரும் சிறார்கடாம்
வல்ல சிற்பி வகுத்த மரப்பரி
மெல்ல வீர்த்து மகிழ்ந்திடு மாறெனா
எல்லை யில்புகழ் எந்தைகதை செய்கேன்

50 மிடல்செறி முக்க ணெம் விசுவே சர்சீர்
இடனெலாம் பயில்தலின் இகழ்ந்தி டாரிதை
மடனுறு மதலையர் மழலை யா மெனா
அடலுறு மறிஞரும் அமைத்துக் கொள்வரால்

[தரவுக் கொச்சகம்]

51

விண்ணாடர் தெரிவரிய விழுப்பொருளே விசுவேசா
பெண்ணாளும் பங்கினனே பெருங்கருணைத் தடங்கடலே
தண்ணாரும் பொழில்புடைசூழ் வட்டுரார் தவப்பயனே
அண்ணால்நின் திருவடியே அடைக்கலங்காண் அருள்புரியே

4 பதிகம்

[ அறுசீர் விருத்தம் ]

52

விண்ணோர் வெருவ வருநஞ்சை மிசையும் பெருமான் விசுவேசன்
பெண்ணின் நல்லாள் விசாலையுடன் பிறங்குஞ் செய்யகோலமதை
கண்ணிற் கண்டே அரிபிரமர் கயிலைச் சாரல் எய்திடுகால்
உண்ணின் றுருகி விஞ்சையர்கள் உவந்தே வீணைமீட்டினரால்

53 பத்தி முதிர்ந்த நாரதரும்
பரமர் பாங்கர் எய்திநின்றே
அத்த அமல அராவணியும்
அரனே அடியார்க் கின்னமிர்தே
முத்தித் தலங்கள் முன்மொழிந்தாய்
முதிரும் அன்பால் நீவைகுஞ்
சித்தித் தலங்கள் சிலசொல்லத்
திருவு ளஞ்செய் என்றிரந்தார்

54 நன்றே கேட்டி நவையில்லாய்
நயந்து நாமுன் தேவியுடன்
நின்றே நாளும் அருள்சுரக்கும்
நியமம் பூண்ட பதிபலவாம்
அன்றே அவற்றுள் யாழ்நாட்டில்
அமைந்த வட்டூர் கொள்ளோலை
என்றே விளம்பும் பதிதானும் ஏற்ற
முடைத்தாம் எனமொழிந்தார்

55 அந்தப் பரிசைக் கலைமலைச்
சருக்க மென்ன அமைத்துப்பின்
நந்துஞ் சைவந் தமிழ்காக்கும்
நயனார் தெய்வப் பதியாகி
முந்தும் வீணா கானபுர மாண்பை
முற்றும் முறைப்படுத்தித்
தந்தே புகன்றாம் யாழ்நாட்டுச்
சருக்கமென்னும் தனிப்பெயரால்

67 ஆயநல் உரிமை தன்னால் அடியனை வேண்டி நின்றான்
மேயபேர் அறிவோர் செய்யும் மேதகு பணியாம் ஈதை
நேயமார் நெஞ்சின் மேவி நிருமலன் துண்ட லானே
ஏயவே இயற்ற லுற்றேன் எண்ணெழுத் தறிகி லாதேன்

68 காரணி கண்ட போற்றி காரணி உரியோய் போற்றி
வாரணி தனமே நல்கும் வாரணி தனத்தாள் பாக
நீரணி கழனி வட்டூர் நீரணி சடில போற்றி
சீரணி ஏற போற்றி சீரணி தருவாய் போற்றி

69 ஆவரு வினைது ரப்ப அருந்துயர் உழக்குங் காலை
ஆவரு வினைவே றில்லை ஐயனே விசுவ நாதா
ஆவரு வினையை மாற்றி அளித்தியென் றிரந்தோர்க்
கெல்லாம்
ஆவரு வினைய கற்றும் அத்தனே சரணீ போற்றி

70 பருப்பெருந் ணீர்மைத் தாய பாயிரச் சருக்கஞ்
சொன்னாம்
பருப்பதம் ஈன்ற துய்ய பாவையுந் தானும் ஆனோன்
மருப்பயில் தாள்கள் சென்னி மன்னிட ஏத்தி நின்று
திருப்பொலி கைலைச் சருக்கம் செப்பிடப் புகுது
மாலோ

விசாலாட்சி சமேத விசுவநாத சுவாமி

திருவடிதுணை

பாயிரச் சருக்கம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 70